

# சிங்கப்பூரின் கொவிட்-19 தடுப்பூசித் திட்டம்

## நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை



## தடுப்பூசி ஏன் முக்கியம்?

**தடுப்பூசியின் உதவியுடன்:**

—

நமது அன்புக்குரியவர்களையும் சமூகத்தையும் கொவிட்-19 கிருமித் தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும்

—

நாம் இன்னும் பல நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கவும், சிங்கப்பூரை விரைவில் பாதுகாப்பாக மீண்டும் திறக்கவும் முடியும்

—

நமது சுகாதாரப் பராமரிப்புச் சேவை கிருமிப்பரவலைக் கையாள சிரமப்படுவதைத் தடுக்க முடியும்

## கொவிட்-19 என்பது என்ன?

கொவிட்-19 என்பது எச்சில் துளிகளாலும், இருமும்போதும் தும்மும்போதும் காற்றில் கலக்கும் அல்லது பொருட்கள்மீது படியும் சளியாலும் பரவும் ஒரு தொற்றுநோயாகும்.

இதன் அறிகுறிகளில் காய்ச்சல், இருமல், மூச்சுத்திணறல், தொண்டைப்புண், சளி, வாசத்தை அல்லது சுவையை உணர முடியாத நிலை ஆகியன உள்ளடங்கும்.

வயதானவர்களுக்கு அல்லது உடல்நலப் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு கொவிட்-19 தொற்றினால், அவர்கள் அதிக பாதிப்படையக்கூடும்.

> “*நீங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளும்போது, உங்களை மட்டும் பாதுகாத்துக் கொள்ளவில்லை. மற்றவர்களை, குறிப்பாக உங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாக்கவும் உங்கள் பங்கைச் செய்கிறீர்கள். நம்மில் அதிகமானோர் தடுப்பூசி போட்டுக்கொண்டால், கிருமிப் பரவலைத் தடுத்து, நாம் அனைவரும் ஒரு சமுதாயமாகப் பாதுகாப்பாக இருப்போம்*”

\- பிரதமர் லீ சியன் லூங்

கொவிட்-19 கிருமிப்பரவலைத் தடுக்க தடுப்பூசி உதவுகிறது. அதிகமானோர் தடுப்பூசி போட்டுக் கொள்ளும்போது, கிருமிப்பரவல் குறையும்.





## இந்தத் தடுப்பு மருந்து பாதுகாப்பானதா?

சிங்கப்பூரில் அனுமதிக்கப்பட்டிருக்கும் கொவிட்-19 தடுப்பு மருந்துகள், பாதுகாப்பையும் தரங்களையும் நிறைவேற்றுகின்றன. அவற்றின் அறியப்பட்ட ஆபத்துகளைவிட நன்மைகளே அதிகம்.

சுகாதார அறிவியல் ஆணையமும் கொவிட்-19 தடுப்பூசிக்கான வல்லுநர் குழுவும் தடுப்பு மருந்தின் விவரங்களை விரிவாக ஆராய்ந்த பிறகே அனுமதி அளிக்கப்பட்டது.



# யாரெல்லாம் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்?

சிங்கப்பூரர்களுக்கும் நீண்டகால உள்ளூர்வாசிகளுக்கும் தடுப்பூசி இலவசம்.

நீங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளவேண்டுமா என்பது பற்றி மருத்துவ அதிகாரியால் ஆலோசனை கூறமுடியும். தடுப்பூசி போட்டுக் கொள்வதற்குமுன், உங்களது மருத்துவப் பிரச்சனைகளை மருத்துவரிடம் அல்லது தாதியிடம் தெரியப்படுத்துங்கள், குறிப்பாக -

- நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பமடையத் திட்டமிட்டிருந்தால் அல்லது தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருந்தால்
- உங்களது நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருந்தால் (எடுத்துக்காட்டாக, அண்மையில் உறுப்புமாற்று சிகிச்சை செய்யப்பட்டிருந்தால், புற்றுநோய் அல்லது ஹெச்ஐவி கிருமி இருந்தால்)
- இதற்குமுன் கடுமையான ஒவ்வாமைகள் ஏற்பட்டிருந்தால்
- இரத்த அணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், இரத்தக்கசிவு அல்லது இரத்தக்கட்டு குறைபாடுகள் இருந்தால், அல்லது இரத்த அடர்த்தியைக் குறைக்கும் மருந்துகளை உட்கொண்டால்
- இதற்குமுன் உங்களுக்கு கொவிட்-19 கிருமித்தொற்று ஏற்பட்டிருந்தால்
- இதற்குமுன் வேறு கொவிட்-19 தடுப்பு மருந்தைப் பெற்றிருந்தால்
- கடந்த இரண்டு வாரங்களில் வேறு தடுப்பூசி (வேறு நோய்க்காக) போட்டுக் கொண்டிருந்தால்



## தடுப்பூசியை எவ்வாறு பெறுவது

தடுப்பூசி போட்டுக்கொள்ள அனைவரும் படிப்படியாக அழைக்கப்படுவார்கள். உங்களுக்கான நேரம் வரும்போது, தகவல் அனுப்பி வைக்கப்படும். முன்பதிவு செய்வதற்கான வழிகாட்டியும் உங்களுக்குத் தரப்படும். முன்பதிவின் மூலம் மட்டுமே தடுப்பூசி போடப்படும்.

தடுப்பு மருந்துகள் கட்டம் கட்டமாக சிங்கப்பூரை வந்தடைவதால், சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கும், எளிதில் பாதிப்படையக் கூடியவர்களுக்கும் (வயதானவர்கள், அதிக ஆபத்தான தொழில்துறைகளில் வேலை செய்வோர்) முன்னுரிமை அளிக்கப்படும்.





## தடுப்பூசி போட்டுக் கொள்வதில் ஏதேனும் ஆபத்துகள் உள்ளதா?

கொவிட்-19 தடுப்பு மருந்தால் சில பக்கவிளைவுகள் ஏற்படலாம். இது மற்ற தடுப்பு மருந்துகளின் பக்கவிளைவுகளைப் போன்றதே. பெரும்பாலான பக்கவிளைவுகள் சில நாட்களுக்குள் குணமாகி விடும்.



தடுப்பூசி போட்ட பிறகு ஏற்படக்கூடிய பக்கவிளைவுகளில் காய்ச்சல், தலைவலி, உடல்வலி உள்ளடங்கும். உங்களுக்குப் பக்கவிளைவுகள் இருந்தால், தேவைக்கேற்ப 6 மணி நேரத்திற்கு ஒருமுறை 1 முதல் 2 பெரசெட்டமால் மாத்திரைகள் சாப்பிடலாம். அறிகுறிகள் நீடித்தால், மருத்துவரிடம் செல்லுங்கள். இதுதவிர, ஊசி குத்திய இடம் சிவப்பாகி, வலியும் வீக்கமும் ஏற்படலாம்.

தடுப்பூசி போட்ட பிறகு, உங்களைக் கண்காணிப்பதற்காக 30 நிமிடங்களுக்கு நீங்கள் மருந்தகத்தில் இருக்கவேண்டும்.




அரிய சூழ்நிலைகளில், இந்தத் தடுப்பு மருந்தால் கடுமையான ஒவ்வாமை ஏற்படலாம். மூச்சுத்திணறல், முகம், தொண்டை, கண்கள் அல்லது உதடுகள் வீங்குதல், வேகமான இதயத்துடிப்பு, தலைச்சுற்றல் மற்றும் பலவீனம், உடல் முழுவதும் மோசமான சொறி போன்றவை இதில் உள்ளடங்கும். உங்களுக்குக் கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டால், உடனடியாக மருத்துவரிடம் செல்லுங்கள். உடனடியாக 995 அழையுங்கள் அல்லது ஆக அருகிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லுங்கள்.

*" நாம் அனைவரும் முயற்சியைக் கைவிடாமல்
ஒன்றிணைந்து செயல்பட்டு, கொவிட்-19
கிருமிப்பரவலை முறியடிக்கும் பயணத்தின்
இறுதிக்கட்டத்தைக் கடந்துசென்று நமது
இலக்கைப் பூர்த்தி செய்யவேண்டும்."*

- பிரதமர் லீ சியன் லூங்

மேல்விவரம் அறிய,
vaccine.gov.sg
இணையப்பக்கத்தைப்
பாருங்கள் அல்லது
1800-333-9999 என்ற
எண்ணை அழையுங்கள்.

வெளியீட்டாளர்

MINISTRY OF HEALTH
SINGAPORE

ஜனவரி 2021